# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்தை புகார்தாரர் அனுசி தன்னுடைய தோட்டத்தில் உள்ள கிணற்று பாசனத்திற்கு இலவச மின்சார இணைப்பு வேண்டி விண்ணப்பித்திருந்ததாகவும். மனுவை பார்வையிட்ட கிருஷ்ணகிரி மாவட்ட கெலமங்கலம் மின்வாரிய உதவி பொறியாளர் திருமதி.தென்னரசி. இலவச மின்சார இணைப்பு வழங்குவதற்கு ரூ.30.000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என வற்புறுத்துவதாகவும் அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 07.10.2020 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது கிருஷ்ணகிரி மாவட்ட கெலமங்கலம் மின்வாரிய உதவி பொறியாளர் திருமதி.தென்னரசி. புகார்தாரரிடமிருந்து ரூ.10.000/- முன்பணம் கையூட்டாக வாங்கும்போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.